# கைத்தொழில்

## பொதுவான செயலாற்றம்

1986 இல் கைத்தொழில் துறையின் செயலாற்றம் முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கணிசமான முன்னேற்றத்தைக் காட்டியது. உண்மை நியதிகளில் கைத்தொழில் வெளியீடு 1985 இன் 5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1986 இல் 12 சதவீதத்திஞல் அதிகரித்தது. கைத்தொழில் வெளியீட்டில் ஏற்பட்ட இவ்வுயர்வான வளர்ச்சி தனியார் துறைக் கைத்தொழில் தொடர்ந்து விரிவடைந்தமையினுலும், அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளின் சிறந்த செயலாற்றத்தினுலும் ஏற்பட்டதாகும். தனியார் துறைக் கைத்தொழில் உற்பத்தியின் பெறுமதி 15 சதவீதத்திஞல் அதிகரித்த வேளையில் அரசதுறைக் கைத்தொழிலின் பெறுமதி 8 சதவீதத்திஞல் உயர்வடைந்தது.

அரசதுறைக் கைத்தொழில்களின் செயலாற்றத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் உணவு, குடிவகையும் புகையிலையும், மரமும் மர உற்பத்திகளும் என்பன நீங்கலான எல்லாத் துணை வகைகளினதும் வெளியீட்டில் பிரதிபலித்தன. பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், அரச மரக் கூட்டுத்தாபனம், இலங்கைக் கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம் என்பன அரசியல் குழப்பங்களினுல் மிகவும் பாதிக்கப்பட்டன.

தனியார் துறையில் எல்லாத் துணை வகைகளிலும் உற்பத்தி இலாபங்கள் பதிவுசெய்யப்பட்டன. புடவைகளும் அணியும் ஆடைகளும், உணவு, குடிவகை, புகையிலை, இரசாயனம் என்பவற்றின் வெளியீட்டில் மிகப் பெரும் அதிகரிப்புக்கள் காணப்பட்டன. மேற்கு நாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய பொருளாதார சமூகத்திலிருந்து அணியும் ஆடைகளுக்கான கேள்வி அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். 1986 இல் கைத்தொழில் ஏற்றுமதிகள் 11 சதவீதத்திஞல் அதிகரித்தமைக்குப் பொறுப்பாகவிருந்த முக்கிய காரணி இதுவாகும்.

அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளின் திறமையினை முன்னேற்றுவதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. உதாரணமாக, மிகவும் நட்டத்தில் இயங்கி வந்த சலாவயில் அமைந்துள்ள இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலை 1986 மாச்சில் இருந்து புறம்பான முயற்சியாக கணிக்கப்பட்டது. அரசிற்குச் சொந்தமான மூன்று ஒட்டுத் தொழிற்சாலைகளை தனியார் துறைக்கு மாற்றல் செய்யும் செயல்முறைகள் இவ்வாண்டில் நிறைவு செய்யப்பட்டன. தொடர்ந்து நட்டத்தில் இயங்கிவந்த வர்த்தக ரீதியில் ஆற்றலைக் கொண்டிராத தேசிய பொதியிடல் பொருட்கள் கூட்டுத்தாபனம் இலங்கை புகையிலைக் கைத்தொழில்கள் கூட்டுத்தாபனம், அரச வளமாக்கித் தயாரிப்புக் கூட்டுத்தாபனத்தின் யூரியாத் தயாரிப்புப் பொறி என்பன 1986 மாச்சில் மூடப்பட்டன. இலங்கை வன்கலக் கூட்டுத்தாபனம் திறமையற்ற நிலையினைக் காட்டிய அதன் பொறிகளில் சிலவற்றை மூடிவிட்டது.

நாட்டின் கைத்தொழில் நடவடிக்கைகளின் வேகத்தில் தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க செல்வாக்கினைக் கொண்டிருந்தன. உற்பத்தியாளர்கள் இறக்குமதிகளிலிருந்து எழும் போட்டியினை ஈடு செய்யும் வகையில் செலவு, தரம் என்பனவற்றில் கவனமாக இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டதுடன், நெகிழ்ச்சித்தன்மை கொண்ட செலாவணி வீதக்

கொள்கை, குறைக்கப்பட்ட தீர்வைகள் என்பனவற்றின் கீழ் ஏற்றுமதிச் சந்தைகளைப் பேணவும், விரிவாக்கம் செய்யவும் போதியளவு போட்டித் திறனைக் கொண்டிருக்கவும் வேண்டியிருந்தனர். சந்தைப்படுத்தல், பொதியிலிடுதல், புதிய தொழில்நுட்பம் என்பன கைத்தொழில் துறையில் மேலும் முக்கியத்துவத்தினை வேண்டிநின்றன. ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களை ஊக்குவிக்கும் முகமாகவும், உயர்வான கூட்டிய பெறுமதியைக் கொண்ட இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்களுக்குப் போதியளவு பாதுகாப்பு வழங்குமுகமாகவும் தீர்வை விதிப்புக் கொள்கை கைத்தொழில் ஊக்குவிப்பிற்கு வழிப்படுத்தப்பட்டது.

முதலீடு

வெளிநாட்டு மதியுரைக் குழுவினால் வழங்கப்பட்ட புதிய கைத்தொழில் ஒப்புதல்கள் 1986 இல் பெருமளவு முதலீட்டு, வெளியீட்டு உள்ளார்ந்த வாய்ப்பினைக் காட்டின. வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழு முந்திய ஆண்டில் ஒப்புதலளித்த 30 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 41 கைத்தொழில் செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இச்செயற்றிட்டங்கள் ரூ. 1,300 இலட்சம் வெளிநாட்டுக் கூறினையும் உள்ளடக்கிய ரூ. 6,440 இலட்சம் கொண்ட மொத்த முதலீட்டினை எதிர்பார்த்தன. ஆடைகள், புடவைகள் என்பனவற்றிலிருந்து மாறுபடும் கொள்கையினை உறுதிப்படுத்துவதாக இச் செயற்றிட்டங்களில் 28 இரசாயனங்கள், பிளாத்திக்கு இறப்பர்ப் பொருட்கள், உலோகப் பொருட்கள், உணவு குடிவகைகள் போன்ற ஏனைய கைத்தொழில் துணை வகுப்புக்களில் அமைந்தன. இச் செயற்திட்டங்களின் மொத்த தொழில் வாய்ப்பு 5,570 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு 1986 இல் ரூ. 1,880 இலட்சம் முதலீட்டு வாய்ப்பினைக் கொண்ட 10 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இச் செயற்றிட்டங்களின் மொத்த வேலைவாய்ப்பு 2,960 ஆக மதிப்பிடப்பட்டது. 1985 இல் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு ரூ. 2,860 இலட்சம் முதலீட்டு வாய்ப்பினைக் கொண்ட 13 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. ஒப்புதலளிக்கப்பட்ட கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை ஆண்டு முடிவில் 221 ஆக விளங்கியது. இவற்றில் 126 தொழில் முயற்சிகள் பல்வேறு கைத்தொழில்களைத் தொடருவதற்காக கொழும்பு பொரும்பாக பொருளாதார ஆணைக்குழுவுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டன.

கைத்தொழில், அறிவியல் அலுவல்கள் அமைச்சு, புடவைக் கைத்தொழில் அமைச்சு, கடற்றொழில் அமைச்சு என்பவற்றை உள்ளடக்கியிருந்த உள்நாட்டு முதலீட்டு மதியுரை ஆணைக்குழு முந்திய ஆண்டில் ஒப்புதலளித்த 344 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 321 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. 1986 இல் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் ரூ. 4,000 இலட்சம்கொண்ட முதலீட்டை எதிர்பார்த்ததுடன் 9,660 பேருக்கு வேலைவாய்ப்பினை வழங்குமெனவும் எதிர்பார்க்கப்பட்டது.

உற்பத்தி

உண்மை நியதிகளிலான கைத்தொழில் உற்பத்திப் பெறுமதி 1985 இன் 5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1986 இல் 12 சதவீதத்தினுல் அதிகரிக்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பெற்ருேலிய வெளியீட்டின் பெறுமதியை நீக்கின் கைத்தொழில் உற்பத்தி 14 சதவீதத்தினுல் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

1986 இல் உற்பத்தியில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த கைத்தொழில் துணைத் துறைகளாக அடிப்படை உலோக உற்பத்திகள் (58 சதவீதம்), புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் (22 சதவீதம்), உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (14 சதவீதம்), உணவு, குடிவகைகள் புகையிலை உற்பத்திகள் (7 சதவீதம்), இரசாயனம், பெற்ருேலியம், பிளாத்திக்குப் பொருட்கள் (8 சதவீதம்), தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (7 சதவீதம்), தாளும் தாள் உற்பத்திகளும் (8 சதவீதம்) என்பன விளங்கின. மர, மர உற்பத்திகளின் வெளியீடு உள்நாட்டு மரத்தின் கிடைக்கக்கூடிய தன்மை குறைவாக இருந்தமையினுல் 13 சத வீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது.

முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களுக்கு வெளியேயும் உள்ளேயும் அணியும் ஆடைகளின் கைத்தொழில் வெளியீட்டின் உயர்வான மட்டம் புடவைகள், அணியும் ஆடைகள், தோல் பொருட்கள் எண்பனவற்றில் பதிவுசெய்யப்பட்ட மெச்சத்தக்க வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது. பெருந்தொகையான கைத் தொழில் வகுப்புகளின் வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு அதாவது புகையிலை, மா, பால் உணவுகள், சீனி உற்பத்திகள், விசுக்கோத்துக்கள், சொக்கலேற்று, அப்பமனை உற்பத்திகள் என்பன உணவு, குடிவகை, புகையிலை வகுப்பின் உற்பத்தியில் ஏற்பட்ட உயர்ந்த மட்டத்திற்குப் பெருமளவு பொறுப்பாயமைந்தன. அரசதுறைக் கைத்தொழிலில் பெற்ருேலியம், ரயர் என்பவற்றினதும் தீப்பெட்டி, பிளாத்திக்கு உற்பத்திகள், பி.வி.சி. குழாய்கள், மருந்துப்பொருட்கள் போன்ற தனியார் துறைக் கைத்தொழில்களில் ஏற்பட்ட அதிகரித்த உற்பத்தி இரசாயனம், பெற்ருேலியம், பிளாத்திக்கு உற்பத்திகளின் வெளியீட்டில் அதிகரிப்பினை ஏற்படுத்தின. தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் துறையின் முன்னேற்றம் பெரும்பாலும் அரச வன்கலக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டில் ஏற்பட்ட வளர்ச்சியினுல் ஏற்பட்டது. தனியார் துறையில் வேளாண்மைப் பொறித்தொகுதியும் கருவிகளும், தையல் பொறிகள், தண்ணீர்ப் பம்புகள், மின் துணைக்கருவிகள் என்பனவற்றில் அதிகரித்த உற்பத்தி பதிவுசெய்யப்பட்டது. அடிப்படை உலோக உற்பத்திகளின் வெளியீட்டிற்குப் பின்னணியிலான முக்கிய காரணியாக இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனத்தின் முன்னேற்றமான செயலாற்றம் விளங்கியது. இலங்கை சீமெந்து, இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனங்களின் அதிகரித்த வெளியீடு உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகளில் அதிகரித்த வளர்ச்சியினை ஏற்படுத்தியது. மா, மர உற்பத்திகளின் வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கியமாக இலங்கை ஒட்டுப்பலகை, அரச மரக் கூட்டுத்தாபனங்களின் குறைந்த மட்டத்திலான உற்பத்தி காரணமாக ஏற்பட்டதாகும்.

அட்டவணை 1·15

## கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 1982–1986
## (நடைமுறை விலைகள்)

பத்து இலட்சம் ரூபாய்களில்


| வகை | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 (அ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை ... | 5,246 | 6,998 | 8,623 | 10,497 | 12,129 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் ... | 3,863 | 5,136 | 7,565 | 9,505 | 12,088 |
| 3. மர, மர உற்பத்திகள் (தளபாடங்கள் உட்பட) ... | 361 | 522 | 640 | 705 | 632 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் ... | 725 | 901 | 907 | 1,187 | 1,289 |
| 5. இரசாயனம், பெற்ரோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் ... | 13,099 | 11,888 | 14,328 | 13,104 | 11,088 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (பெற்ரோலியமும் நிலக்கரியும் தவிர்ந்த) ... | 1,370 | 1,468 | 1,829 | 1,854 | 2,053 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 262 | 302 | 199 | 123 | 281 |
| 8. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறியும், போக்குவரத்துக் கருவிகளும் ... | 904 | 1,129 | 1,456 | 1,592 | 1,757 |
| 9. தயாரிக்கப்பட்ட பொருட்கள் (வேறெங்கும் குறிப்பிடப்படாதவை) ... | 74 | 90 | 106 | 125 | 136 |
| மொத்தம் | 25,904 | 28,434 | 35,653 | 38,692 | 41,453 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.

நடைமுறை நியதிகளில், கைத்தொழில் உற்பத்தியின் பெறுமதி 1985 இன் 9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1986 இல் 7 சதவீதத்தினுல் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. உண்மை நியதிகளிலான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் நடைமுறை விலைகளில் ஏற்பட்ட குறைவான வளர்ச்சி மசகு எண்ணெய் இறக்குமதிகளின் சராசரி விலையில் எற்பட்ட சடுதியான வீழ்ச்சி (43 சதவீதம்) காரணமாக ஏற்பட்டதாகும். நடைமுறை நியதிகளில் பெற்ரோலிய உற்பத்திகளின் உற்பத்திப் பெறுமதி 19 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. பெற்ரோலிய பொருட்களின் பெறுமதி நீக்கப்படின் கைத்தொழில் உற்பத்தி 17 சதவீதத்தினுல் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வதிகரிப்பு முக்கியமாக புடவையும் ஆடையும் (27 சதவீதம்), உணவு, குடிவகை, புகையிலை (16 சதவீதம்) என்பவற்றிலிருந்து ஏற்பட்டது. குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் (11 சதவீதம்), தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (15 சதவீதம்), தாளும்தாள் உற்பத்திகளும் (9 சதவீதம்) என்பவற்றில் பதிவுசெய்யப்பட்டன. உற்பத்திப் பெறுமதியில் வீழ்ச்சிகள் மரமும் மர உற்பதிகளும் (10 சதவீதம்), இரசாயனமும் பெற்ரோலிய உற்பத்திகளும் (15 சதவீதம்) என்பவற்றில் பதிவுசெய்யப்பட்டன. இரசாயன, பெற்ரோலிய உற்பத்திகளில் ஏற்பட்ட வீழ்ச்சி பெற்ரோலிய இறக்குமதிகளின் சராசரி விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக ஏற்பட்டதாகும்.

## அரச துறையின் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்



## அரசதுறை கைத்தொழில்

இவ்வாண்டில் பல அரச துறைக் கைத்தொழில்களின் நடவடிக்கைகளில் ஊக்கமளிக்கும் அபிவிருத்திகள் காணப்பட்டன. இறக்குமதிகளிலிருந்து எழும் பலமான போட்டியினைக் கருத்திற்கொண்டு இலங்கை ரயர்க் கூட்டுத்தாபனம் அதன் உற்பத்திகளின் தரத்தினை முன்னேற்றுவதற்கும் செலவுகளைக் குறைப்பதற்குமான அதன் பொறிகளையும் பொறித் தொகுதிகளையும் நவீன மயப்படுத்தும் திட்டத்தினைத் தொடங்கியது. கூட்டுத்தாபனம் 1986 இல் பிரபலம் வாய்ந்த அளவு, வகைகளில் புதிய ரயர்களை அறிமுகம் செய்தது. தோல் பதனிடல், காலணிப் பொறிகளின் இயலளவினையும் திறமையினையும் அதிகரிக்கும் வகையில் தோற்பொருட்கள் கூட்டுத்தாபனம் இவ்வாண்டில் நவீனமயப்படுத்தும், விரிவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தினை ஆரம்பித்தது. உப்புக் கூட்டுத்தாபனமும் ஆண்டுக்கு 15,000 மெற்றிக் தொன் உப்பினை உற்பத்தி செய்யும் ஆற்றலைக்கொண்ட கொலங்கல லெவாயவிலுள்ள புதிய உப்பளம் மீதான பெரும்பாலான வேலையினை நிறைவுசெய்தது.

UNIVERSITY OF MORATUWA LIBRARY SRI LANKA

அட்டவணை 1.16

அரசதுறை முதன்மைக் கைத்தொழில்களின் வெளியீட்டுச் சுட்டெண்

(1977=100)

| வகை | 1984 | 1985 | 1986(அ) |
|---|---|---|---|
| 1. உணவு, குடிவகை, புகையிலை | 52.5 | 48.6 | 46.8 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 140.9 | 185.9 | 208.0 |
| 2.1 புடவைகள் | 186.8 | 249.9 | 279.0 |
| 3. மர, மர உற்பத்திகள் | 149.1 | 139.3 | 103.4 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் | 117.2 | 142.8 | 160.6 |
| 5. இரசாயன உற்பத்திகள் | 125.1 | 109.5 | 114.9 |
| 5.1 பெற்றோலிய உற்பத்திகள் | 119.9 | 109.1 | 115.3 |
| 5.2 ரயர் | 126.4 | 130.2 | 136.4 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 106.4 | 103.9 | 134.7 |
| 6.1 சீமெந்து | 111.0 | 105.2 | 115.4 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 72.7 | 40.5 | 64.1 |
| 8. தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 87.0 | 101.8 | 134.8 |
| எல்லா வகைகளும் | 112.8 | 108.1 | 116.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் தவிர்ந்த | 104.8 | 106.9 | 117.5 |

(அ) தற்காலிகமானவை.

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

உண்மை நியதிகளில் அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளின் வெளியீடு 1985 இல் ஏற்பட்ட 4 சதவீத வீழ்ச்சிக்கு எதிராக 1986 இல் 8 சதவீதத்தினுல் அதிகரித்தது. இது முக்கியமாகப் பெற்றோலியத் தூய்மியின் வெளியீட்டில் ஏற்பட்ட 6 சதவீத அதிகரிப்பு, புடவைகள் தோற்பொருட்களின் வெளியீட்டில் ஏற்பட்ட 12 சதவீத விரிவாக்கம் என்பவற்றினுல் ஏற்பட்டதாகும். இவை மொத்த அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டில் முறையே 52 சதவீதத்திற்கும் 22 சதவீதத்திற்கும் வகைகூறின. அரசதுறைக் கைத்தொழிலின் ஏனைய துணை வகுப்புகள் 1986 இல் 8 சதவீதத்தினுல் அதிகரித்தன.

அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளில் பெரும்பாலானவை இவ்வாண்டில் முன்னேற்றமான செயலாற்றத்தினைக் கொண்டிருந்தன. வெளியீட்டில் பெருமளவு அதிகரிப்புக்கள் இலங்கை உருக்கு (58 சதவீதம்), அரச வன்கலம் (47 சதவீதம்), இலங்கை சீமெந்து (47 சதவீதம்), தேசிய உப்பு (34 சதவீதம்) இலங்கைத் தோற்பொருட்கள் (31 சதவீதம்), தேசிய புடவையும் தேசிய தாளும் (ஒவ்வொன்றும் 12 சதவீதம்), இலங்கை சீனி (10 சதவீதம்) இலங்கை பெற்றோலியம் (6 சதவீதம்), இலங்கை ரயர் (5 சதவீதம்), பிரித்தானிய இலங்கைக் கூட்டுத்தாபனம் (55 சதவீதம்) இலங்கைப் பட்டு (13 சதவீதம்) ஆகிய கூட்டுத்தாபனங்களினால் பதிவுசெய்யப்பட்டன. 1977 இலிருந்து காணப்பட்ட வெளியீட்டில் குறைவான மட்டமாக விளங்கிய 1985 ஆம் ஆண்டு, 1986 இல் இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டில் ஏற்பட்ட உயர்வான வளர்ச்சியினை விளக்குகின்றது. உருட்டப்பட்ட உற்பத்திகளின் வெளியீடு மூன்று மடங்கு அதிகரித்த வேளையில் கம்பி உற்பத்திகள் இவ்வாண்டில் ஆறு மடங்கு அதிகரித்தன. மண்வெட்டிகள், கதவு சாளரப் பொருத்துகள், வார்ப்பு இரும்பு என்பனவற்றின் வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் அரச வன்கலக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டு மட்டத்தினை உயர்த்தின. 1986 யூலை—ஒற்றோபர் காலப்பகுதியில் தனியார் உப்பளங்களின் முன்னேற்றமான செயலாற்றம் தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டின் அதிகரிப்பிற்கு ஓரளவுக்கு உதவியது. தேசிய தாள் கூட்டுத்தாபனத்தின் உயர்ந்த மட்டத்திலான வெளியீடு எம்பிலிப்பிட்டிய ஆலையில் ஏற்பட்ட வெளியீட்டு அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்டது.

UNIVERSITY OF MORATUWA LIBRARY

வெளியீட்டு மட்டங்களில் வீழ்ச்சிகள் இலங்கை ஒட்டுப்பலகை (33 சதவீதம்), அரச மரம் (16 சதவீதம்), இலங்கைக் கனிப்பொருள் மணல் (14 சதவீதம்), எண்ணெய் கொழுப்பு (6 சதவீதம்), ஆகிய கூட்டுத்தாபனங்களில் ஏற்பட்டது.

பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் இவ்வாண்டில் மூடப்படவேண்டியிருந்தது. இலங்கைக் கனிப்பொருள் மணல்கூட்டுத்தாபனத்தின் புல்மோட்டைத் தொழிற்சாலையின் வெளியீடு அரசியல் குழப்பங்களினால் பாதகமாகப் பாதிக்கப்பட்டது. அரசமரக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சி வடக்குக் கிழக்குப் பிரதேசங்களிலிருந்து மரத்திற்கான நிரம்பல் தடைப்பட்டதினால் ஏற்பட்டதாகும். சலாவ தொழிற்சாலை $1\frac{1}{2}$ மாதங்கள் மூடப்பட்டமையும், நிரம்பல் போதாதிருந்தமையும் இலங்கை ஒட்டுப் பலகைக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டில் வீழ்ச்சியை ஏற்படுத்தின. சந்தைப்படுத்தல் பிரச்சினைகள் காரணமாக எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு வீழ்ச்சியடைந்தது.

அரசதுறை முயற்சிகளை வர்த்தக ரீதியில், ஆற்றல் வாய்ந்த அடிப்படையில் தொழிற்படுத்த வேண்டுமென்ற அரசின் கொள்கைக்கு ஏற்புடைய வகையில் பெரும்பாலான அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகள் இவ்வாண்டில் இலாபங்களை ஏற்படுத்தக் கூடியனவாக இருந்தன. அரச அகழ்வு, கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனமும் தேசிய தாள் கூட்டுத்தாபனமும் அவற்றின் இலாபங்களை முறையே 80 சத வீதத்தினாலும் 58 சதவீதத்தினாலும் உயர்த்தின. 1986இல் இலாபங்களைப் பதிவுசெய்த ஏனைய அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகள் இலங்கை ரயர்க் கூட்டுத்தாபனம், இலங்கை ஒட்டுப் பலகைக் கூட்டுத்தாபனம், இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம், இலங்கை எண்ணெய் கொழுப்புக்

அட்டவணை 1.17

**கைத்தொழில் முயற்சிகளுக்கு அரசின் நிதி மாற்றல்கள் 1984—1986**

ரூபா பத்து இலட்சம்

| கூட்டுத் தாபனங்கள்/முயற்சிகள் | மூலதன | | | நடைமுறை | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1984 | 1985 | 1986(அ) | 1984 | 1985 | 1986(அ) | 1984 | 1985 | 1986(அ) |
| 1. தேசிய பாற்சபை ... | 7.5 | 10.3 | 2.5 | 25.1 | 50.0 | 35.0 | 32.6 | 60.3 | 37.5 |
| 2. இலங்கை எண்ணெய், கொழுப்பு ... | 99.1 | 6.0 | — | — | — | — | 99.1 | 6.0 | — |
| 3. இலங்கை சீனி ... | 410.2 | 508.3 | 150.0 | 7.1 | — | — | 417.3 | 508.3 | 150.0 |
| 4. தேசிய புடவை ... | 127.2 | — | 42.0 | — | 30.4 | — | 127.2 | 30.4 | 42.0 |
| 5. தேசிய தாள் ... | 5.6 | — | — | — | 27.1 | 8.0 | 5.6 | 27.1 | 8.0 |
| 6. அரச வளமாக்கி தயாரிப்பு ... | 26.1 | — | — | 537.3 | 43.0 | 27.3 | 563.4 | 43.0 | 27.3 |
| 7. தேசிய பொதியிடல் பொருட்கள் ... | — | — | — | 1.0 | — | — | 1.0 | — | — |
| 8. அரச அச்சகம் ... | 51.6 | 3.7 | — | — | — | — | 51.6 | 3.7 | — |
| 9. வரையறுக்கப்பட்ட இலங்கை ஒட்சிசன் ... | — | — | — | 6.1 | 7.6 | — | 6.1 | 7.6 | — |
| மொத்தம் ... | 727.3 | 528.3 | 194.5 | 576.6 | 158.1 | 70.3 | 1,303.9 | 686.4 | 264.8 |

(அ) ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள்

மூலம்: திறைசேரி

கூட்டுத்தாபனம், தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், அரச வடிசாலைக் கூட்டுத்தாபனம், அரச மரக் கூட்டுத்தாபனம், இலங்கை பெற்ரோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம் என்பனவாகும். இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனமும் அரச வன்கலக் கூட்டுத்தாபனமும் 1986 இல் தமது நட்டங்களைக் குறைக்கக்கூடியதாகவிருந்தன.

1986 இல் அரசதுறை முயற்சிகளுக்கான அரசின் மாற்றல் கொடுப்பனவுகள் ரூ. 2,650 இலட்சமாக அமைந்தன. இது 74 சதவீத மூலதன மாற்றல்களையும் (ரூ. 1,950 இலட்சம்), 26 சதவீத நடைமுறை மாற்றல்களையும் (ரூ. 700 இலட்சம்) உள்ளடக்கியிருந்தது. இலங்கை சீனிக் கூட்டுத்தாபனம் அரசதுறைக் கைத்தொழிலுக்கான மொத்த அரசின் மாற்றல்களில் ரூ. 1,500 இலட்சத்தினை அல்லது 57 சதவீதத்தினைப் பெற்றது. தேசிய புடவைக் கூட்டுத்தாபனம், தேசிய பால்சபை, அரச வளமாக்கித் தயாரிப்புக் கூட்டுத்தாபனம் என்பன இம்மாற்றல்களைப் பெற்ற ஏனைய முக்கிய பெறுநர்களாகும். அண்மை ஆண்டுகளில் அவதானிக்கப்பட்டவாறு அரசதுறைக் கைத்தொழில்கள் அரசின் வரவுசெலவுத்திட்டத்தில் குறைந்த அளவில் தங்கியிருப்பதனைப் பிரதிபலிப்பதாக அரசதுறைக் கைத்தொழிலுக்கான மாற்றல்கள் 1986 இல் மேலும் வீழ்ச்சியடைந்தன.

**வலுவும் எரிபொருளும்**

இலங்கை மின்சபைக்கான விற்பனை நீங்கலான கைத்தொழில் எரிபொருளின் விற்பனைகள் 1986 இல் 8 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன. பாரடீசல் விற்பனை 1985 இனைவிட 2 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் உலையெண்ணெய் விற்பனை 9 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. மின்வலு அதிகமாகக் கிடைக்கக்கூடியதாக இருந்தமையினுல் சக்தியின் முக்கிய மூலமாக விளங்கிய மின்வலுவுக்கு மாற்றல்கள் ஏற்பட்டமையினை இது காட்டுகின்றது.

கைத்தொழிலில் வலுவின் மிகப் பரந்த மூலமாக மின்வலு தொடர்ந்தும் விளங்கி, முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இதன் நுகர்வு 8 சதவீதத்தினுல் அதிகரித்தது. இது பெரிய கைத்தொழில்களில் ஏற்பட்ட 14 சதவீத அதிகரிப்பு, நடுத்தரக் கைத்தொழில்களில் ஏற்பட்ட 3 சதவீத அதிகரிப்பு, சிறு கைத்தொழிலில் ஏற்பட்ட 4 சதவீத அதிகரிப்பு என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.*

அட்டவணை 1.18

**கைத்தொழிலில் வலு, எரிபொருள் என்பனவற்றின் பயன்பாடு 1984—1986**

| விடயம் | 1984 | 1985 | 1986(அ) |
|---|---|---|---|
| 1. மின்வலு (கிலோவாட் மணித்தியாலங்கள்) ... .. | 790.9 | 850.4 | 922.0 |
| 1.1 சிறு கைத்தொழில் ... .. | 31.7 | 34.7 | 36.0 |
| 1.2 நடுத்தரக் கைத்தொழில் ... .. | 371.9 | 411.4 | 424.1 |
| 1.3 பெரிய கைத்தொழில் ... .. | 387.3 | 404.3 | 461.9 |
| 2. கைத்தொழில் எரிபொருளின் உள்நாட்டு விற்பனைகள் (ஆ) ('000 மெற்றிக் தொன்கள்) ... .. | 283.5 | 163.2 | 149.5 |
| 2.1 பார டீசல் ... .. | 23.7 | 20.3 | 19.8 |
| 2.2 உலை எண்ணெய் ... .. | 214.8 | 142.9 | 129.7 |

மூலங்கள்: இலங்கை மின் சபை
இலங்கை பெற்ரோலியக் கூட்டுத்தாபனம்.

(அ) தற்காலிகமானவை.
(ஆ) இலங்கை மின்சபைக்கான விற்பனைகள் நீங்கலாக.

* தயாரிப்பு ஏற்றுமதி செய் கைமுறைக் கைத்தொழில்களை உள்ளடக்குகின்றது. சிறு கைத்தொழில் 50 கி. வாட்டுக்குக் குறைந்ததும், நடுத்தரக் கைத்தொழில் 50–500 கி. வாட்டையும் பெரும் கைத்தொழில் 500 கி. வாட்டுக்கு மேற்பட்ட இயலளவினையும் கொண்ட கூறுகளாகும்.

**முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள்**

*1986* இல் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவினால் பத்து புதிய செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டு *1986* இன் முடிவில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை *221* ஆக விளங்கியது. இவற்றில் *126* ஏற்கனவே கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவுடன் ஒப்பந்தங்களில் கைச் சாத்திட்டுள்ளன. மொத்தமாக *68* முயற்சிகள் கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் வர்த்தக உற்பத்தியில் ஈடுபட்டுள்ள வேளையில் *19* முயற்சிகள் கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கு வெளியே உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன. *1986* முடிவில் பியகம முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் நான்கு செயற்றிடங்கள் தொழிலில் ஈடுபட்டன. தொழிற்பாட்டிலுள்ள செயற்றிட்டங்களில் *33* தயாரிக்கப்பட்ட ஆடைகளின் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன.

அட்டவணை *1.19*

**முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்—தொழில் வாய்ப்பும் ஏற்றுமதி வருவாய்களும் 1985—1986**

| வகை | 1985 | | 1986(அ) | |
|---|---|---|---|---|
| | தொழில் நிலை (திசெம்பர் முடிவில்) எண்ணிக்கை | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (க.எ.பெ.) ப. இ. ரூ.. | தொழில் நிலை (திசெம்பர் முடிவில்) எண்ணிக்கை | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (க.எ.பெ.) ப.இ.ரூ. |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை ... | — | 6.4 | 471 | 21.8 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் ... | 26,541 | 3,051.8 | 33,937 | 4,415.4 |
| 3. மர, மர உற்பத்திகள் (தளபாளங்கள் உட்பட) ... | 11 | 0.4 | 24 | 1.1 |
| 4. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் ... | 1,399 | 141.1 | 1,655 | 217.7 |
| 5. உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்தி (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்த்து) | 1,267 | 122.0 | 1,648 | 206.0 |
| 6. தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறியும் போக்குவரத்துக் கருவிகளும் ... | 135 | 51.3 | 149 | 94.2 |
| 7. தயாரிக்கப்பட்ட பொருட்கள் (வேறெங்கும் குறிப்பிடப்படாதவை) ... | 2,493 | 234.7 | 3,237 | 259.3 |
| 8. பணிகள் (ஆ) ... | 494 | 193.9 | 493 | 233.7 |
| மொத்தம் .. | 32,340 | 3,801.6 | 41,614 | 5,449.2 |

மூலம்: கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு

(அ) தற்காலிகமானவை.
(ஆ) "எயர் லங்கா" நீங்கலாக.

1986 இல் ஒப்புதலளிக்கபட்ட செயற்றிட்டங்கள் மின்னியல் பொருட்கள், கருங்கற் பாளங்கள், வெண்களிமண் உருவங்கள், ஆபரணங்களும் மாணிக்கக்கல் செதுக்குதல், உருக்குத் துளைகளும் சுரை ஆணிகளும், ஒப்பனைப் பொருட்கள், தூரிகைகள், மீன்பிடிவலைகள், கணனிப் பாவனைப் பொருட்கள், மணிக்கூடுகளையும் கைக்கடிகாரங்களையும் பொருத்துதல் என்பவற்றின் உற்பத்தி வகுப்புக்களைச் சார்ந்திருந்தன.

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு முயற்சிகளின் மொத்த ஏற்றுமதி வரவுகள் 1986 இல் ரூ. 54,490 இலட்சமாக (சிஎஉ 1,660 இலட்சம்) விளங்கின. இது முந்திய ஆண்டின் வரவுகளைவிட இலங்கை ரூபாய்களில் 43 சதவீத அதிகரிப்பும் சிஎஉ நியதிகளில் 20 சதவீத அதிகரிப்பும் கொண்டதாகும். புடவைகளும் தைத்த ஆடைகளும் துறை முந்திய ஆண்டினைப் போன்று 1986 இலும் ஏற்றுமதி வரவுகளில் ஐந்தில் நான்கு பங்கிற்கு வகைகூறின.